# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2053/3 - 2018 ජනවාරි මස 08 වැනි සඳුදා - 2018.01.08

*2053/3 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : KDS/ GIK/ 4/ 1/ 3/ 19.
எனது இல. : 4 -3/ 15/ 2013/ VE/ 95.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்க இஹல கோரளை பிரதேச செயலாளர் பிரிவில், மல்வத்தகம கிராம அலுவலர் பிரிவில், பெல்லபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை அதிபதியால் தயாரிக்கப்பட்ட 2017.05.18 ஆந் திகதிய ஆரம்ப வரைபட இல. 6639 எனக் குறிப்பிடப்பட்டுள்ள 10.1171 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட குருந்துவத்தை எனும் காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:-

***1. துண்டு இல. 01***
காணியின் பெயர் : குருந்துவத்தை; விபரம்: - ; உரிமை கோருபவர் : ரொபட் டபிள்யு. ஹாலி; விஸ்தீரணம்: 9.8685 ஹெக்டயார்.

***2. துண்டு இல. 02***
காணியின் பெயர் : குருந்துவத்தை; விபரம்: - ; உரிமை கோருபவர் : ரொபட் டபிள்யு. ஹாலி; விஸ்தீரணம்: 0.1107 ஹெக்டயார்.

***3. துண்டு இல. 03***
காணியின் பெயர் : குருந்துவத்தை; விபரம்: - ; உரிமை கோருபவர் : ரொபட் டபிள்யு. ஹாலி; விஸ்தீரணம்: 0.1379 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு கங்க இஹல கோரளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. ஜீ. லெனரோல்,
பிரதேச செயலாளர்,
கங்க இஹல கோரளை.

பிரதேச செயலகம்,
கங்க இஹல கோரளை,
2018, சனவரி 03.

*1 - 593*



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*